8th March 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், ஒரு சந்தர்ப்பம் அல்ல, இரண்டு சந்தர்ப்பம் அல்ல, அமைச்சர்களோ அல்லது அதிகாரிகளோ பத்திரிகை நிருபர்களிடம் பேசியிருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது, இப்போது கனம் அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து, பத்திரிகை நிருபர்களுக்குச் சொன்னதில் உள்ள கோளாறு அல்லது அதைப் புரிந்து கொள்வதில் இருக்கிற கோளாறு என்று தெரியவில்லை. அடிக்கடி பத்திரிகையில் இதைப் பற்றி. . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புரிந்து கொள்வதில் எந்த விதமான கோளாறும் இல்லை, பத்திரிகைகள் தலைப்புக் கொடுப்பதில் தான் கோளாறு. புரிந்து கொள்வதில் தவறு ஏற்படவில்லை, தலைப்புப் போடுவதில் உள்ள தவறு.

கனம் சபாநாயகர் : 'சப்ஜெக்ட்' எங்கேயோ போய் விட்டது. What can we do with such newspapers?

I do not think that this matter comes within the scope of an adjournment motion. I, therefore, withhold my consent.

III.—PRIVILEGE MATTERS.

(1) ALLEGED TREATMENT METED OUT TO SRI M. RAJANGAM, M.L.A., WHILE IN POLICE CUSTODY.

* **திரு. செ. மாதவன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மன்ற உறுப்பினர் திரு. இராசாங்கம் அவர்கள் போலீஸாரால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். சட்டவிரோதமாக இவ்விதம் தாக்கப்பட்டிருக்கிறார்கள். எலெக்டரிக் ஷாக் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதுகுத் தோல் உரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி கனம் அங்கத்தினர் ஒருவரை, போலீஸார் தாக்கியிருக்கிறார்கள்.

கனம் சபாநாயகர் : இதைப்பற்றிய விவரம் தேவையில்லை, 'டார்ச்சர்' என்கின்ற ஒரு வார்த்தை போதுமானது. கனம் அங்கத்தினர் இவ்விதமெல்லாம் நடந்தது என்று சொல்லுவார்கள். சர்க்கார் தரப்பில் இல்லையென்று சொல்லுவார்கள். he hon. Member can explain how this matter comes under privilege.

திரு. செ. மாதவன் : இவ்விதம் ஒரு அங்கத்தினர் தாக்கப்படுகிற நிலை ஏற்பட்டால் அது இந்த மன்றத்தின் உறுப்பினருடைய உரிமையைப் பாதிப்பதாகுமா இல்லையா என்பது தான் இப்போதுள்ள பிரச்னை. பல தீர்ப்புகளிலே இது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'அஸ்ஸால்ட்' 'மொலெஸ்டேஷன்' இவைகளை எல்லாம் உரிமைப் பிரச்னையாகும் என்று தீர்ப்பு அளிக்கப்படுகிறது. ஆனால் அந்தச் சமயத்தில் 'அஸ்ஸால்ட்', 'மொலெஸ்டேஷன்' என்பது உரிமைப் பிரச்னை ஆகும் என்பது நாம் கவனிக்க வேண்டிய ஒன்று ஆகும். இந்த நோக்கத்திலே தனிப்பட்ட

[திரு. செ. மாதவன்] [8th March 1965

ஒரு நபர், ஒரு மன்ற உறுப்பினரைத் தாக்கினால் அது உரிமைப் பிரச்னை ஆகுமா? அல்லது போலீஸாரோ, அரசாங்கமோ ஆள் வைத்துத் தாக்கினால் அது உரிமைப் பிரச்னை ஆகுமா?

MR. SPEAKER: That is not the matter to be considered now. Under what circumstances the Member was assaulted and whether that would constitute a breach of privilege is the question to be considered.

திரு. செ. மாதவன்: மன்ற உறுப்பினர் இந்த மன்றத்திற்கு வரும்போதோ அல்லது திரும்பிச் செல்லும்போதோ தாக்கப்பட்டால் அது உரிமைப் பிரச்னை ஆகும் என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நாம் இந்த உரிமைப் பிரச்னையில், போலீஸாரால் லாக்கப்பில் இருக்கும்போது தாக்கப்பட்டால், அது உரிமைப் பிரச்னையாக வருமா என்று நாம் கவனிக்க வேண்டிய பிரச்னையாக இருக்கிறது. ப்ளாக்ஸ்டோன் இதைப்பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள் . . .

I shall read it now. "Privilege of Parliament was principally established in order to protect its Members not only from being molested by their fellow-subjects but also, more especially from being oppressed by the power of the Crown."

இதை விளக்கி 'மேஸ் பார்லிமெண்ட்டரி ப்ராக்டீஸ்' என்ற புத்தகத்தில் 1751-ல் நடந்த வழக்கு பற்றி 122-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"In 1751 Mason, a constable, for apprehending, insulting and abusing a member about 11 O'clock at night in the Liberty of Westminster and detaining him in confinement all night, and Carne, the High Constable of the City and Liberty of Westminster, for refusing to discharge him except upon condition that he would take no notice of what had passed, were voted guilty of a breach of privilege and committed."

என்ற குறிப்பு மேஸ் பார்லிமெண்ட்டரி ப்ராக்டீஸில் இருக்கிறது. "Apprenending, insulting and abusing" என்று வந்திருக்கிறது. அதுவும் இரவு நேரத்தில் போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப்பட்ட நிலையைக் கூறுகிறது. இந்த நிகழ்ச்சியிலும், நண்பர் ராஜாங்கம் அவர்கள் போலீஸ் லாக்கப்பில் இருக்கும்போது, சட்ட விரோதமான இப்படிப்பட்ட கொடுமை நடந்திருக்கிறது என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் இங்கே வற்புறுத்திக் கூற ஆசைப்படுவது, சாதாரணக் குடிமகன் என்ற முறையில் தீங்கு நேரிடும்போது சட்டப்படி நீதி மன்றத்திற்குப் போக வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சட்ட மன்ற உறுப்பினராக இருப்பதாலேயே சில கொடுமைகள் நிகழ்கின்றன. ஆகையினால் தான் சட்ட மன்றத்தில் இந்த உரிமைப் பிரச்னையைக் கிளப்ப வேண்டியிருக்கிறது. சட்ட மன்றமும் இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும். ஒரு தொகுதியில் புரட்சி நடக்கிறது. அதற்குப் பல பேர்கள் காரணமாக இருக்கிறார்கள். அந்தத் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக இப்படிப்

8th March 1965] [திரு. செ. மாதவன்]

பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. அதை நான் ஒரு புது நிகழ்ச்சியாகக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அது உரிமைப் பிரச்னையாக வருமா வராதா என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு ஒரு உதாரணம் சொல்ல ஆசைப்படுகிறேன். மேற்கு வங்காளத்தில் ஒரு பிரச்னை ஏற்பட்டது. உரிமைப் பிரச்னையா இல்லையா என்று குழுவிற்கு அனுப்புவதற்கு முன் 'ப்ரைமா ஃபாஸி' கேஸ் இருக்கிறதா இல்லையா என்று தாங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். இதற்கு 'ப்ரைமா ஃபாஸி' கேஸ் இருக்கிறது என்பது தான் இங்குள்ள பிரச்னை. காரணம், ஏற்கெனவே இதைப் போல ப்ரீஸீடென்ட் இல்லாமல் இருந்தால், அதை இந்த மன்றம், உரிமையாக வருமா, வராதா என்று தெரிந்து கொள்ள ப்ரைமா ஃபாஸி கேஸ் இருக்கிறது என்று சொல்லி, உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம். அதற்கு ஆதாரம் இருக்கிறது. மேற்கு வங்காளத்தில் இப்படிப்பட்ட ஒரு சர்ச்சை வந்தது. ப்ரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்டின் கீழ் கைது செய்யப்பட்ட நிலையில் உரிமைப் பிரச்னை வருமா என்ற சர்ச்சை வந்தது. 1939-ல் 'காப்டன் ராம்ஸே கேஸில் இருந்து டிஃபென்ஸ் காஸஸ் உரிமைப் பிரச்னையாக வராது என்று ஏற்கெனவே அங்கே தீர்ப்பு இருக்கிறது. அதற்குப் பின் தேஷ்பாண்டே கேஸிலே, லோக் சபாவிலே ப்ரிவென்ட்டிவ் டிட்டென்ஷன் ஆக்டின் கீழ் கைது செய்யப்பட்ட கேஸிலே உரிமைப் பிரச்னை வராது என்று தீர்ப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் உரிமைப் பிரச்னைக்கு வருமா, வராதா என்ற பிரச்னை வந்தபோது இது பற்றி விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. "ஒரு உரிமைப் பிரச்னையில் முதலில் இந்த மன்றம் கவனிக்க வேண்டியது ப்ரைமா ஃபாஸி கேஸ் இருக்கிறதா என்பதாகும். ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறுதியிட்டுத் தீர்க்கப்படாமல் இருந்தால் அது ப்ரைமா ஃபாஸி கேஸ் இருப்பதாக அமையும்" என்று மேற்கு வங்கச் சட்ட சபைத் தலைவர் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார். அதைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

"Whether a distinction can be drawn between such cases and cases of preventive detention under ordinary law as to whether the House should exercise its right of parliamentary privilege only with reagrd to the attendance of the Members during silting hours if it thinks that the presence of such Members is absolutely essential for the discharge of parliamentary responsibilities."

"இந்த மன்றம் புதிதாக ஒன்றை எடுத்துக்கொண்டு, ஏற்கெனவே வேறு மன்றங்களில் தீர்ப்புச் சொல்லப்பட்டிருந்தாலும் இந்த மன்றத்தில் தீர்க்கப்படாத பிரச்னையாக இருப்பதால் அது ப்ரைமா ஃபாஸி கேசாக வரலாம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த என்னுடைய உரிமைப் பிரச்னையைப் பொறுத்தவரையில் எந்த மன்றத்திலும் அறுதியிட்டு முடிவு செய்யப்படவில்லை. நம் மன்றத்திற்கென்று தனியான உரிமைகள் உரிமைப் பிரச்னையைப் பொறுத்த அளவில் கொடுக்கப்பட்டிருப்பதாலும், இந்த மன்றத்திலே தீர்மானிக்கப்படாத நிலையில் இருப்ப

[திரு. செ. மாதவன்] [8th March 1965

தால் இது ஒரு ப்ரைமா ஃபாஸியாக இருக்கும், அதை உரிமைக் குழு விசாரிக்கலாம் என்பது என்னுடைய பணிவான கருத்து ஆகும். இன்னும் குறிப்பிட்டிருக்கிறது.

"As Legislatures are sovereign so far as powers, privileges and immunities of its members are concerned, Deshpande's case in the House of the People may not necessarily be binding on State Legislatures.

As this is the first case of its kind in this Legislature after the new Constitution, I think I should give an opportunity to the Privilege Committee of this House to consider the matter in all its aspects. I, therefore, refer the matter of the Committee of Privileges of this House".

"Assault and molestation" ஒரு மன்ற உறுப்பினர் போலீசாரால் தாக்கப்பட்டிருக்கிறார், காயப்படுத்தப்பட்டிருக்கிறார். சட்டத்திற்குப் புறம்பாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பது வாதம். இந்த உரிமைப் பிரச்னையைப் பொறுத்த அளவில் எந்த மன்றத்திலும், இந்த மன்றம் உட்பட, தீர்மானிக்கப்படவில்லை என்பது என்னுடைய வாதம். 1953-ல் ஒரு பிரச்னை திரு. என். கே. பழனிசாமி என்பவரைப் பற்றி திரு. கே. பி. கோபாலன் என்ற உறுப்பினர் சட்ட சபையிலே கொண்டு வந்திருக்கிறார். என்றாலும் அதிலே 'அஸ்ஸால்ட் அண்ட் மொலெஸ்டேஷன்' என்று குறிப்பிட்டிருக்கிறதே தவிர அப்போது நிகழ்ந்த நிகழ்ச்சியிலே இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி, அடிக்கப்பட்டதாகவோ, தாக்கப்பட்டதாகவோ ப்ரொஸீடிங்ஸிலே காணப்படவில்லை. 1953-ல் கொடுக்கப்பட்ட தீர்ப்பும் அஸ்ஸால்ட் அண்ட் மொலஸ்டேஷனுக்கு தான் பொருந்தும், இந்த நிகழ்ச்சிக்குப் பொருந்தாது என்பது என்னுடைய வாதம். வேறு மன்றங்களிலும், எந்த மன்றத்திலும் எந்த மாதிரியான ஒரு பிரச்னையின் மீது தீர்மானம் கொடுக்கப்படவில்லை. மேஸ் பார்லிமெண்ட்டரி ப்ராக்டீசில் ஒரு குறிப்பிட்ட வழக்கைத் தவிர வேறு இல்லை. புதிதாக இருக்கிற காரணத்தினால் இதற்குப் ப்ரைமா ஃபாஸி கேஸ் இருக்கிறது, உரிமைப் பிரச்னையாக வருமா, வராதா என்று தீர விசாரித்து ஒரு முடிவுக்கு வருவது ஒரு நல்ல ப்ரீஸிடெண்ட்டாக இருக்கும் என்று கருதி இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பும்படி தங்களைப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் போலீஸ் பாதுகாப்பில் இருக்கும்பொழுது வதை செய்யப்பட்டிருக்கிறார் என்பது ஒரு முக்கியமான பிரச்னை. இந்தச் சபையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்கு வரும்பொழுது தாக்கப்பட்டாரா அல்லது போகும்பொழுது தாக்கப்பட்டாரா என்பது மட்டும் அல்ல இதில் பார்க்க வேண்டியது. இந்தச் சபையின் அங்கத்தினர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டியது முக்கியமானது. அதாவது, பயம் இல்லாமல், தயவு தாட்சண்யம் இல்லாமல், இந்தச் சபையின் அங்கத்தினர்கள் தங்களுடைய கடமையை ஆற்றுவதற்கும்,

8th March 1965] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

இந்தச் சபையின் அங்கத்தினர் என்ற முறையில் தன்னுடைய தொகுதியில் பணிபுரிவதற்கும், நிர்வாகத்தில் குறை இருந்தால் அதைப்பற்றிப் பயப்படாமல், தயவு தாட்சண்யம் இல்லாமல் எடுத்துக் கூறுவதற்கும் தகுந்த சூழ்நிலை இருப்பது மிகவும் முக்கியம். அதைத் தாங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். சாதாரண பிரஜைகளிடமிருந்து கூட, போலீஸ் பாதுகாப்பில் இருக்கும்பொழுது, இப்படி 'தேர்டு டிகிரி மெதட்ஸ்'—மூன்றும் தர முறைகளை--உபயோகப்படுத்தி சாட்சியங்களைச் சேகரிப்பது தவறு. சாதாரணப் பிரஜைக்கு இது சம்பந்தமாக வேறு பரிகாரம் இருக்கலாம். அதைப்பற்றி சம்பந்தப்பட்ட மாஜிஸ்ட்ரேட் முன்பு மனுச் செய்து கொள்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கலாம். ஆனால், இந்தச் சபையின் அங்கத்தினருக்கு அப்பேர்ப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுமானால், மற்றவர்களுக்கும் ஒரு அச்சம் ஏற்படும். இது அங்கத்தினர் திரு. ராஜாங்கத்தைப்பற்றிய பிரச்னை மட்டும் அல்ல. இந்தச் சபையின் அங்கத்தினர்கள் போலீஸ் நிர்வாகத்தைப் பற்றி பல சந்தர்ப்பங்களில் இந்தச் சபையில் கண்டித்துப் பேசலாம், நிர்வாகத்தைப்பற்றி கண்டித்துப் பேசலாம், அதற்காக தங்கள் மீது போலீஸார் பழி வாங்கக் கூடும், வஞ்சம் தீர்த்துக் கொள்ளக் கூடும் என்ற அச்சம் ஏற்படக் கூடாது, இந்தச் சபையின் அங்கத்தினர்களுக்கு. அப்பொழுது தான், பயம் இல்லாமல், தயவு தாட்சண்யம் இல்லாமல், இந்தச் சபையின் அங்கத்தினர்கள் தங்கள் கடமையை ஆற்றுவதற்கு முடியும். சபையின் அங்கத்தினரிடம் 'தேர்டு டிகிரி மெதட்ஸ்' உபயோகப்படுத்தியது பற்றி நாம் தனியாக விசாரிக்க வேண்டும். இது இந்தச் சபையின் அங்கத்தினர்களுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய பிரச்னையாகும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்த மாதிரி ஒரு விஷயம் உரிமைப் பிரச்னைக்கு விடப்படாமலே தீர்க்கப்பட்டிருக்கிறது. பஞ்சாப் சட்டசபை அங்கத்தினர் ஒருவர் கையில் விலங்கிட்டு அழைத்துச் செல்லப்பட்டபொழுது அதைப் பற்றி விசாரிக்கப்பட்டு, போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கத்தினர் கையில் விலங்கிட்டதே தவறு என்று சொல்லப்படுகிறபொழுது, இம்மாதிரி இந்தச் சபையின் அங்கத்தினர் ஒருவரை வதைகள் செய்தது உண்மையாக இருக்குமானால், அது இந்தச் சபையின் அங்கத்தினர்கள் அனைவருக்கும் அச்சத்தை ஏற்படுத்தக் கூடும், திகிலை ஏற்படுத்தக் கூடும். நிர்வாக நிகழ்ச்சிகள் சம்பந்தமாகப் பல சந்தர்ப்பங்களில் இங்கே பேசக்கூடும். நான் இங்கே இன்னும் சிறிது நேரத்தில் பேசுவதற்கு இருக்கிறேன். அப்படிப் பேசும்பொழுது அச்சம் இல்லாமல், தயவு தாட்சண்யம் இல்லாமல் பேசுவதற்கான சூழ்நிலை இருக்க வேண்டும். நாமெல்லாம் அரசியல்வாதிகள், ஏதாவது ஒரு கிளர்ச்சியில் ஈடுபடலாம். அதனால் போலீஸ் பாதுகாப்பில் இருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கு ஏற்படுவது இயல்பு. அப்படி ஏற்படுமானால், ஏதாவது ஒரு நிகழ்ச்சியை மனதில் வைத்துக்கொண்டு போலீஸ்காரர்கள் எதிர்க் கட்சி அங்கத்தினர்களை வதைக்கு உட்படுத்தக்கூடிய நிலைமை

ஏற்படக் கூடாது. இந்தச் சபையின் அங்கத்தினர்கள் அச்சத்திற்கு இடம் இல்லாமல், தயவு தாட்சண்யம் இல்லாமல் தங்களுடைய கடமையைப் புரிவதற்கு சாதகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டியது மிகவும் அவசியம். ஆகவே, இந்தப் பிரச்னையை இந்தச் சபையின் உரிமைக் குழு விசாரித்து, இது உரிமைக்குள் வருமா, எந்த அளவுக்கு வரும் என்று தீர்மானிக்க வேண்டிய கடமை இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, தாங்கள் இதை உரிமைக்குரிய விஷயம் என்று கருதி, உரிமைக் கமிட்டியின் பரிசீலனைக்கு விட்டு, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்களால் எழுப்பப்பட்டிருக்கிற உரிமைப் பிரச்னையை உரிமைக் குழுவின் பரிசீலனைக்கு விடுவதன் மூலம் நல்ல தெளிவு பெறலாம் என்ற கருத்தினை கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்களும், கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். முன்பே கூட கனம் உறுப்பினர் திரு. சங்கரனைப் பொறுத்து மதுரையில் நடந்த சம்பவம்பற்றிய பிரச்னை இந்த மன்றத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இந்த மன்ற உறுப்பினர்கள் தவறு செய்வார்களேயானால், முறைப்படி, சட்டப்படி போலீஸ் நடவடிக்கை எடுப்பதற்கு, வழக்குத் தொடருவதற்கு, நீதிமன்றத்தில் தண்டனை வாங்கித் தருவதற்கு, உரிமைகள் இருக்கின்றன. ஆனால், பாதுகாப்பில் இருக்கும்பொழுது, அவரை துன்புறுத்தி, அடித்துக் கொடுமையைப்படுத்தி, அவரைப் பல்வேறு வகைகளில் இணங்க வைக்கிற முறைகளுக்கு இடம் ஏற்படுமேயானால், கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டது போல, சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையை தன்னுடைய தொகுதியில் செவ்வனே செய்வதற்கு வாய்ப்பு ஏற்படாத நிலை ஏற்பட்டுவிடும். மன்ற உறுப்பினர்களின் மதிப்பு காப்பாற்றப்பட வேண்டும். அவர்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று மதிக்கத் தக்க ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் மட்டுமல்ல, இந்த மன்றத்தில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களின் மதிப்பும் காப்பாற்றப்பட வேண்டும். அவர்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்கின்ற அளவுக்கு அவர்களை மதிக்க வேண்டும். அவர்கள் மீது சட்டப்படியான தவறுகள் இருந்தால், சட்டப்படியான நடவடிக்கைகள் இருந்தால், சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு போலீஸுக்கு முழு உரிமை இருந்தாலும், அவர்களை கொடுமைபபடுத்தி, அடித்து, துன்புறுத்துவதற்கு இடம் கொடுப்போமானால், எதிர்காலத்தில் பலரும் தங்கள் தங்களது கடமைகளை உண்மையாக ஆற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதுவும் எதிர்க் கட்சியினர்கள் பல்வேறு கிளர்ச்சிகளில் ஈடுபடக்கூடிய காலத்தில், அவர்களை இப்படிப்பட்ட காவல் இடங்களில் வைக்கப்படும் சூழ்நிலை ஏற்படும். கனம் உறுப்பினர் திரு. ராஜாங்கத்தின் நிலைமையை அப்படியே விட்டுவிடுவோமானால்

8th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அது ஒரு முன் மாதிரியாக அமைந்து, பலரும் அம்மாதிரி துன்புறுத்தப்படுவதற்கான கொடிய நிலை ஏற்பட்டுவிடும். மன்ற உறுப்பினர்களின் மதிப்பு காப்பாற்றப்படவேண்டும். அவர்களை அவமானப்படுத்தக்கூடிய, அவர்களுக்கு தீமைகள் இழைக்கக் கூடிய நிலைமை இருக்கக் கூடாது. அவர்களுடைய மதிப்பு எல்லா வகையிலும் காப்பாற்றப்பட வேண்டும், சந்தேகத்திற்கு அப்பாற் பட்டவர்கள் என்று கருதப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும் என்பதை நிலைநாட்டுகிற முறையில் இதை ஒரு உரிமைப் பிரச்னை யாகக் கருதி, உரிமைக் குழுவின் ஆய்வுக்கு விட்டு நல்லதொரு முடிவு ஏற்பட வேண்டும். எதிர்காலத்தில் அது வழிகாட்டியாக அமையக்கூடும். இதைப் பொறுத்துத் தீர்ப்பு வழங்க வேண்டிய நிலைமையில் இப்பொழுது இல்லை. இது உரிமைக் குழுவின் பரிசிலனைக்கு விடவேண்டிய ஒன்று, இல்லையா என்பதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். இதை உரிமைக் குழுவின் ஆய்வுக்கு விடுவதன் மூலம், ஒரு நல்ல நிலைமை ஏற்படக்கூடும்; இதைப் பொறுத்து நல்லதொரு தீர்ப்பு ஏற்படக்கூடும், அதை எடுத்துக்காட்டாக வைத்து மன்றத்தை நடத்திச் செல்வதற்கு வழிவகைகள் ஏற்படும் என்ற முறையில், இதை உரிமைக் குழுவின் பரிசிலனைக்கு அனுப்ப வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, சம்பந்தப்பட்ட உறுப்பினர் வதை செய்யப்பட்டார் அல்லது சித்திரவதை செய்யப்பட்டார் என்று கூறப்படுவதை நான் முற்றிலும் மறுக்கிறேன். இந்த மன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, சாதாரண பிரைஜையாக இருந்தாலும் சரி, இதில் வித்தியாசம் பாராட்டுவதைக்கூட நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஒரு சாதாரணப் பிரஜையாக இருந்தாலும் அவரையும் வதை செய்யக் கூடாது. அது முற்றிலும் தவறு. அப்படி யாரேனும் செய்தார் என்று ஏற்பட்டால், அவர் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. இந்த விஷயத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. மாஜிஸ்டிரேட் முன்பு வழக்கு வரும். அப்பொழுது இதிலே குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்க ளுக்குள்ள குறைகளை, போலீஸ்காரர்களால் ஏற்பட்ட குறைகளை, இவைகளையெல்லாம் எடுத்து அங்கே கூற முடியும். அதற்குப் பிறகு மாஜிஸ்டிரேட் இவைகளையெல்லாம் விசாரித்து, நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். இதிலே இந்த நிலையிலே 'பிரைமா பாஸி' கேஸ் ஒன்றும் இல்லை. ஆகவே, இதிலே உரிமைப் பிரச்னை எழவில்லை என்று தான் தங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: Sir, I am not pleading for the hon. Member, Sri Rajangam. But I am pleading for the whole House and for all the hon. Members.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அப்பொழுதே சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிவிட்டார்களே !

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட அங்கத்தினர் வேண்டு மானல் கோர்ட்டுக்குப் போகலாம். ஆனால், இதிலே எல்லா அங்கத் தினர்களும்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது என் னுடைய பிரச்னே.

MR. SPEAKER : Ruling is reserved.

9-30 a.m

(2) EDITORIAL IN THE DAILY "NAM NADU".

MR. SPEAKER : The hon. Member, Sri Karcha Gowder, has given notice of a privilege matter. His case is clear and he may explain it, confining his argument to facts and rules.

* **திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த மன்றத்திலே 3-3-1965 அன்று நிகழ்த்திய உரையைப் பற்றி 5-3-65 அன்று "நம் நாடு" என்ற பத்திரிகையிலே என்னை இழித்தும், குறைத்தும் எடிடோரியல் எழுதப் பட்டிருக்கிறது. எடிடோரியல் அல்லது ஆசிரியர் பகுதியில், 'கார்ச்சா கவுடரின் காட்டுக் கூச்சல்' என்று, நான் இந்தச் சபை யிலே நிகழ்த்திய உரையைப்பற்றித் தீட்டியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக சில வாசகங்களை தங்கள் அனுமதியின் பேரில் சபை முன் கொண்டுவர விரும்புகிறேன். 'விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப் பினர் கார்ச்சா கவுடர் அவர்கள், தம்மியல்புப்படி, கழகத்தை முறையற்ற முறையில் தூற்றி இருக்கிறார் அவர் தூற்றலைக் காட்டுக் கூச்சல் என்றுதான், வேதனையோடு குறிப்பிட வேண்டிய தாகிறது.' கனம் எதிர்க் கட்சித் தலைவர் ஆசிரியராக இருக்கும் ஒரு பத்திரிகையில் இப்படி எழுதப்பட்டிருப்பதைக் கண்டு வேதனைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, "எதிர்க்கட்சிகளால் தூண்டப்பட்ட ரௌடி களையும்—ஏன்—எதிர்க்கட்சிகளில் சிலரையும் பீரங்கிகொண்டு சுட்டிருந்தாலும் நான் வரவேற்று இருப்பேன்" என்று சொன்ன தாகப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் நான் "எதிர்க் கட்சியிலே உள்ள இப்படிப்பட்ட சிலரையும், முதல் அமைச்சர் அவர்கள் துப்பாக்கி பிரயோகம் அல்லது பீரங்கி வைத்துச் சுட்டு இந்த நாட்டின் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்திருந்தாலும் நான் வரவேற்றிருப்பேன்" என்றுதான் சொன்னேன் என்று இந்தச் சமயத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன், அது தான் சட்டசபை ரிகார்டில் இருக்கிறது.

அதற்குப் பிறகு, "சட்ட மன்ற உறுப்பினர் கார்ச்சா கவுடர் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற கருத்து; நூற்றுக்கு நூறு பொய் யாகும், அவர் பேச்சில் கடுகளவு மனித உணர்வும் இருப்பதாகத் தெரியவில்லை" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு கடுமை யாக எதிர்க் கட்சித் தலைவர் ஆசிரியராக இருக்கும் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறதே என்று நினைக்கவே முடியவில்லை.